# மெட்ரோ நிலையங்களில் இசை விழா கோலாகலம்



■ சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில் பறையாட்டம்.

சென்னை, பிப். 1–

ஆலந்துார், சென்ட்ரல் மெட்ரோ நிலையங்களில் இசை விழா நடந்தது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை இசை கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து, பயணியர் மற்றும் பொதுமக்களுக்கு, மெட்ரோ ரயில் நிலையங்களில், இசை மற்றும், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதையொட்டி, சென்ட்ரல், ஆலந்துார் மெட்ரோ ரயில் நிலையங்களில், இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் நடத்தப்பட்டன.

மாலை, 5:00 மணிக்கு ஆலந்துார் மெட்ரோ நிலையத்தில் இருந்து, சென்ட்ரல் மெட்ரோ நிலையம் வரை, அபிஷேக்கின், 'ஸ்டாண்ட் அப்' காமெடி நிகழ்ச்சியும், பிந்து மாலினியின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன.

சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில், மாலை, 6:00 மணியில் இருந்து, பிரீத்தி பரத்வாஜின் பரதநாட்டியம் மற்றும் தீபனின் பறையாட்டம் நடந்தன.

நாளை மாலை, 6:30 மணிக்கு, சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில், சென்னை இசை கலைஞர்களின், இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.